**05.02.2026 அசல் வழக்கு எண்.96/2012 Starting Time : 12.44 p.m.**

**வா.சா.1 திரு.வீரராகவன் த/பெ. வரதன்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 2,3,6,7 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1**). நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப் பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4/5 பாகம் கேட்டுள்ளேன். வழக்கு சொத்துக்கள் வீட்டு மனையா அல்லது நிலமா என்றால் விவசாய நிலம் ஆகும். நான் இந்த வழக்கில் வீட்டு மனை என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு பக்கத்தில் வீட்டு மனை பிரிந்ததால் வீட்டு மனை என குறிப்பிட்டுள்ளேன்.

**2**). சொத்துக்களுக்கு தற்போது மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் ஒரு சென்ட் ஒரு இலட்சம் இருக்கும். இந்த வழக்கில் நான் 4/5 பாகம் பிரித்துக் கொடுத்து ஒப்படைக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்டு குறிப்பிடப்படவில்லை என்றால் அவ்வாறு தான் கேட்டுள்ளேன். நான் 4/5 பாகம் கேட்டு அதன் வழக்கு மதிப்பை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தால் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு வராது என்றும், மாவட்ட நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்தபோது இருந்த மதிப்பை போட்டு தான் தாக்கல் செய்துள்ளேன். அரசாங்க மதிப்பு வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன்.

**3**). நான் வழக்கில் 4/5 பாக உரிமை என்று விளம்புகை செய்ய கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவ்வாறு நான் கேட்க முடியாது என்றும், பாகம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் பாகம் வேண்டும் என்று தான் போட்டுள்ளேன். நான் சரியான நீதிமன்றக் கட்டணம் பிரிவு 37(1)ல் தான் கட்டணம் செலுத்தியிருக்கவேண்டும் என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். தாவா சொத்துக்கள் அனைத்தையும் பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, யாரும் அனுபவிக்கவில்லை சும்மா தான் இருக்கிறது. நான் சரியான பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**4**). நான் நீதிமன்றக் கட்டணம் அதிகமாக செலுத்தவேண்டும் என்பதை தவிர்க்க அதை குறிப்பிடாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான பட்டா 3ம் பிரதிவாதி ஜெயந்தி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், ஆனால் தவறான ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள். 1ம் பிரதிவாதி அருணாச்சலம் 3ம் பிரதிவாதி ஜெயந்திக்கு ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அருணாச்சலம் குடும்ப செலவிற்கு என்று எழுதி வைத்துள்ளார், அவருக்கு திருமணம் ஏதும் நடக்கவில்லை. 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் 3ம் பிரதிவாதி ஜெயந்திக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது தப்பான ஆவணம் ஆகும்.

**5**). தாவா சொத்துக்கள் ஆறுமுகம் என்பவருக்கு பிதுராஜித வகையில் பாத்யப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, ஆறுமுகம், மாணிக்கம் மற்றும் அண்ணாமலை ஆகியோர் சேர்ந்து 05.05.1927ல் கிரயம் பெற்ற சொத்துக்கள் ஆகும். வழக்கு சொத்துக்களை தவிர வேறு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் இரண்டு ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. மேற்படி இரண்டு ஏக்கர் சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. மேற்படி விடுப்பட்ட சொத்துக்களின் பேரில் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அதை வாங்குவது கஷ்டம் என்பதால் தான் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் பூர்வீக சொத்து அனைத்தையும் சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல.

**6**). ஆறுமுகம் எப்போது காலமானார் என்றால் 1959ல் காலமானார். அவர் காலமான பிறகு சொத்துக்களை அவரது பிள்ளைகள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான், இடையில் நாங்களும் அனுபவித்து பயிர் வைத்து வந்தோம். இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி ஆண்டாள் என்னுடன் வழக்கு தாக்கல் செய்ய வரவில்லை என்றால் அவர் தான் சொத்துக்களை விற்றுள்ளார் அதனால் அவர் வரவில்லை. வழக்கு சொத்துக்கள் ஆறுமுகம் என்பவருக்கு 70 ஆண்டுகளுக்கு முன்பு பாகமாக வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆறுமுகம் மகள்களின் பெயர் பவுனம்மாள், கண்ணம்மாள், ஆண்டாள் அம்மாள், இந்திராணி, உண்ணாமலை ஆகியோர் ஆவார்கள்.

**7**). பவுனம்மாளின் வாரிசுகள் யார் என்றால் 1ம் வாதி வீரராகவன், 2,3 வாதிகள் அலமேலு மற்றும் கலா ஆகியோர்கள் ஆவார்கள். கண்ணம்மாளின் வாரிசுகள் யார் என்றால் பெருமாள் மற்றும் முனியன் ஆவார்கள். இந்திராணியின்

வாரிசுகள் யார் என்றால் குப்பு மற்றும் மங்கை ஆகியோர்கள் ஆவார்கள், மேற்படி மங்கை காலமாகிவிட்டார். மங்கை என்பவருக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்ணாமலையின் வாரிசுகள் யார் என்றால் பச்சையம்மாள், கோவிந்தசாமி, துரைமுருகன் ஆகியோர்கள் ஆவார்கள். ஆண்டாள் அம்மாள் வாரிசுகள் யார் என்றால் காந்தா, வசந்தா, சுப்பிரமணி, முருகதாஸ் ஆகியோர்கள் ஆவார்கள்.

8). வழக்கு சொத்துக்களை 50 வருடத்திற்கு முன்பிருந்தே பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதில் எங்களுக்கு பங்கு இல்லை என்றும், பிரதிவாதிகளுக்கு எதிரிடை அனுபவம் உண்டு என்றால் சரியல்ல, நாங்களும் அனுபவித்து வந்தோம், எனது மாமா கிருஷ்ணனும் அனுபவித்து வந்தார். பிரதிவாதிகளின் கிரயம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு பங்கு இருந்திருந்தால் என் பெயரில் கூட்டு பட்டா ஏன் இல்லை என்றால் நான் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட கூடாது என வாங்கவில்லை. என்னுடைய வழக்கு சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வித உரிமை இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை.**

**Ending time : 1.14 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.